**TNVR020001312026**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06-ஆம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.55/2026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>மல்லி காவல் நிலையம்,<br>குற்ற எண்.96/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | சிவசுப்பிரமணியன், (31/26),<br>த/பெ.ஈஸ்வரன்,<br>1/21, வடபட்டி,<br>பூவநாதபுரம்,<br>சிவகாசி தாலுகா. |
| சம்பவம் நடந்த நாள் | | 10.08.2025 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 10.08.2025 |
| எதிரி கைதான நாள்<br>எதிரிகள் பிணையில் சென்ற நாள் | | எதிரி 10.08.2025 அன்றே காவல்நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br>– | 22.05.2026<br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 8.05.2026 |
| குற்றம் | | |

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 Act–ன் கீழ் |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 Act –ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 20.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 22.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 29.05.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.முருகன், B.A., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024 Act–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் பி.ஆர்.எண்.953/2025–ல் உள்ள சா.பொ.1 ஆன சுமார் 180 ML MGM Diamond XXX Rum 30 மதுபான பாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக்கொடுத்த பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 09.01.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.06.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முருகன், B.A., B.L„ அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு கடந்த 10.08.2025 ம் தேதி 10.30 மணிக்கு மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் காவலர்களுடன் மல்லி சரகத்தில் ரோந்து செய்து வரும் போது பூவநாதபுரம் விலக்கு அருகில் வைத்து எதிரி சுமார் 180 ML அளவு கொண்ட MGM DIAMOND XXX RUM பாட்டில்கள் 30 யை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

இன்றி சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024 Act–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.3 வரையிலான ஆவணங்களும், சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4-(1) அ.சா.1 திரு.எட்வின்ராஜா தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 10.08.2025 அன்று மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்த போது காலை 10.30 மணியளவில் தானும் சார்பு ஆய்வாளர் ரகுபதி மற்றும் தகா152 ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து மேற்கொண்டபோது பூவநாதபுரம் விலக்கின் அருகிலுள்ள டாஸ்மாக் அருகே ரோந்து சென்றபோது ஈஸ்வரன் மகன் சுப்பிரமணியன் என்பவர் அதிக லாபத்திற்காக மதுபான பாட்டில்களை விற்றுக் கொண்டிருந்தார் என்றும், அவரிடமிருந்து 30 மதுபான பாட்டில்களை கைப்பற்றி காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும், பின்னர் சம்பவயிடத்தில் வைத்தே அத்தாட்சி தயார் செய்து போலீஸ்

பார்ட்டிகளாகிய தாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை காவல்நிலையம் எடுத்து வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அத்தாட்சி அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.ரகுபதி தனது சாட்சியத்தில், தான் தற்போது மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிவதாகவும், கடந்த 10.08.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு தானும் தலைமை காவலர் 2107 எட்வின்ராஜா மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார் ஆகியோர் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக காலை 10.30 மணிக்கு பூவநாதபுரம் விலக்கு அருகில் வைத்து பின்னர் பெயர்விலாசம் கேட்டு தெரிந்த பூவநாதபுரம் 1/21 வடபட்டி கீழூர் ஈஸ்வரன் மகன் சிவசுப்பிரமணியன் வயது 31/2025 எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தவர் போலீஸ்பார்ட்டிகளாகிய தங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரிக்க அவர் லாப நோக்கத்தோடு மதுபான பாட்டில்களை டாஸ்மாக் கடையில் வாங்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தன் கையில் வைத்திருந்த உப்பு தாள் பையிலிருந்த 1) சுமார் 180 மிலி அளவு கொண்ட MGM Diamond XXX Rum பாட்டில்கள் 30 எண்ணம் எடுத்து தானாக தங்களிடம் ஒப்படைத்தார் என்றும், அதன் பின் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தில் அருகில் உள்ள நபர்கள் யாரும் அத்தாட்சியில் போலீஸ் பார்ட்டிகாகிய தாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை கைது செய்து மேற்படி வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.96/2025 பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 10.08.2025ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் 2107 எட்வின்ராஜா மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார்

ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 18.12.2025 அன்று மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பிஆர்எண்.953/2025 பெறப்பட்டது. படிவம் 91 அசாஆ.3 என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரி மீது 26.12.2025ம் தேதி பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 10.08.2025ம் தேதி 10.30 மணிக்கு மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் காவலர்களுடன் மல்லி சரகத்தில் ரோந்து செய்து வரும் போது பூவநாதபுரம் விலக்கு அருகில் வைத்து எதிரி சுமார் 180 ML அளவு கொண்ட MGM DIAMOND XXX RUM பாட்டில்கள் 30யை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ இன்றி சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், தங்களுக்கு முன்பே சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டதாக கூறியுள்ளதாகவும், எதிரி மீது முன்வழக்குகள் இருப்பதாலும், சார்பு ஆய்வாளர் கூறியதாலும் இவ்வழக்கின் எதிரி தான் குற்றம் செய்த நபர் என்று தாங்கள் முடிவு செய்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதாகவும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் சம்பவயிடத்திலிருந்த சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், அ.சா.1 யே தனது சாட்சியத்தில் அத்தாட்சியில் எதிரி கையெழுத்து செய்தாரா என்று தனக்கு தெரியாது என்றும், அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரியிடம் மதுபானம் வாங்கியதாகவோ அல்லது எதிரி யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், மேற்படி சம்பவயிடம் அருகே அரசு மதுபானக் கடை உள்ள நிலையில், எதிரி மதுபானம் விற்றிருக்க வாய்ப்பில்லை என்றும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எதிரி மீது முன்வழக்குகள் இருப்பதால், அவரை பொய்யான வழக்கு தயார் செய்து இவ்வழக்கின் எதிரியாக சேர்க்கப்பட்டிருப்பதாகவும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. அசா.1 தனது சாட்சியத்தில் கடந்த 10.08.2025 அன்று மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்த போது காலை 10.30 மணியளவில் தானும் சார்பு ஆய்வாளர் ரகுபதி மற்றும் தகா152 ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து மேற்கொண்டபோது பூவநாதபுரம் விலக்கின் அருகிலுள்ள டாஸ்மாக் அருகே ரோந்து

சென்றபோது ஈஸ்வரன் மகன் சுப்பிரமணியன் என்பவர் அதிக லாபத்திற்காக மதுபான பாட்டில்களை விற்றுக் கொண்டிருந்தார் என்றும், அவரிடமிருந்து 30 மதுபான பாட்டில்களை கைப்பற்றி காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும், பின்னர் சம்பவயிடத்தில் வைத்தே அத்தாட்சி தயார் செய்து போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை காவல்நிலையம் எடுத்து வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் அசா.1 தனது குறுக்கு விசாரணையில், சம்பவ இடத்திற்கு தாங்கள் சென்ற போது எத்தனை நபர்கள் எதிரியிடம் மதுபானம் வாங்கினார்கள் என்பது பற்றி தங்களுக்கு முன்பு சென்ற சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், எதிரி மீது ஏற்கனவே முன்வழக்குகள் இருப்பதால், அவர் தான் மதுபானம் விற்றார் என்று சார்பு ஆய்வாளர் தங்களிடம் கூறியதால், தாங்களும் அவர் தான் எதிரி என்று முடிவு செய்ததாகவும், எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்பட வில்லை என்றும், மேற்படி பாட்டில்களை எதிரி எந்த கடையிலிருந்து வாங்கினார் என்பது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், இவ்வழக்கில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் தானும், தலைமைக்காவலர் செந்தில் என்பவரும் கையெழுத்து செய்ததாகவும், எதிரியிடம் சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் பெற்றிருக்கலாம் என்றும், அத்தாட்சியில் எதிரி கையெழுத்து செய்தாரா என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், சார்பு ஆய்வாளர் தயார் செய்து கொடுத்த வாக்குமூலத்தில் தான் கையெழுத்து மட்டும் செய்ததாகவும், எதிரியை எந்த ஆவணத்தின் அடிப்படையில் கைது செய்தார்கள் என்பது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்பது பற்றியும் சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், எதிரியை சம்பவ இடத்தில் வைத்து புகைப்படம் எடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

12. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அசா.2 தனது சாட்சியத்தில், கடந்த 10.08.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு தானும் அ.சா.1 மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார் ஆகியோர் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக காலை 10.30 மணிக்கு பூவநாதபுரம் விலக்கு அருகில் சிவசுப்பிரமணியன் என்பவர் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தவர் போலீஸ்பார்ட்டிகளாகிய தங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரிக்க அவர் லாப நோக்கத்தோடு மதுபான பாட்டில்களை டாஸ்மாக் கடையில் வாங்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தன் கையில் வைத்திருந்த உப்பு தாள் பையிலிருந்த சுமார் 180 மிலி அளவு கொண்ட MGM Diamond XXX Rum பாட்டில்கள் 30 எண்ணத்தை எடுத்து தானாக தங்களிடம் ஒப்படைத்தாகவும், அதன் பின் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தில் அருகில் உள்ள நபர்கள் யாரும் அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்ய முன்வராததால், போலீஸ் பார்ட்டிகாகிய தாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை கைது செய்து மேற்படி வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.96/2025 பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 10.08.2025ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் 2107 எட்வின்ராஜா மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 18.12.2025 அன்று மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பிஆர்எண்.953/2025 பெறப்பட்டதாகவும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரி மீது 26.12.2025ம் தேதி பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அளித்துள்ளார்.

13. அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்த அன்றே புலன் விசாரணை முடிந்துள்ள நிலையில், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு 4 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டதற்கான தனிபட்ட காரணம் எதுவுமில்லை என்றும், அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்வதற்கு முன்பு அவரிடம் சோதனை சம்மதக் கடிதம் பெறப்படவில்லை என்றும், எதிரியிடம் யாரும் மதுபானம் பெற்றதாகவோ, அல்லது எதிரி யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரியிடமிருந்து மதுபானம் விற்ற பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி சட்ட விரோதமாக மதுபானம் விற்றிருந்தால், சம்பவ இடத்தின் உரிமையாளரே அவர் மீது புகார் கொடுத்திருப்பார் என்றும், இவ்வழக்கில் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், எதிரி அரசு மதுபான கடை மூடிய பின்பு மதுபானம் விற்பதாக எந்த புகாரும் பெறப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கு சென்றதாக கூறப்படும் சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டதாகவும், அதில் தானும் தலைமைக் காவலர் செந்தில் என்பவரும் கையெழுத்து செய்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அ.சா.2 இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்று கூறியுள்ளார். இவ்வழக்கின் ஆவணங்களை ஆராய்ந்த போதும், குற்ற இறுதி அறிக்கையுடன் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிரி மீது முன்வழக்குகள் இருப்பதால், அவர் மதுபானம் விற்றார் என்று சார்பு ஆய்வாளர் தங்களிடம் கூறியதால், தாங்களும் எதிரி தான் இவ்வழக்கின் குற்றவாளி என்று நினைத்ததாகவும், அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், சார்பு

ஆய்வாளர் தயார் செய்து கொடுத்த வாக்குமூலத்தில் தான் கையெழுத்து செய்ததாக அ.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2 ம் இவ்வழக்கின் எதிரியிடமிருந்து மதுபானம் பெற்றதாகவோ, அல்லது எதிரி யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ, சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், மது விற்றதாக பணம் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி சட்ட விரோதமாக மது விற்றிருந்தால், அந்த இடத்தின் உரிமையாளரே அவர் மீது புகார் கொடுத்திருப்பார் என்றும், அவ்வாறு புகார் எதுவும் எதிரி மீது பெறப்படவில்லை என்றும், இவ்வழக்கின் சார்பு ஆய்வாளரே ஒப்புக்கொண்டுள்ளார்.

15. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படாதது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

16. இவ்வழக்கின் சம்பவம் நடந்த 10.08.2025 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 03.10.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான தகுந்த விளக்கமும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வெளிப்படவில்லை. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை கருத்தில் கொண்டும், புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும்

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற்கொண்டும், மேற்படி இவ்வழக்கு சங்கதிகள் பற்றியே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படாததைக் கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024 Act–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. இவ்வழக்கில் பி.ஆர்.எண்.953/2025–ல் உள்ள சா.பொ.1 ஆன சுமார் 180 ML MGM Diamond XXX Rum 30 மதுபான பாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

19. எதிரி எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திரு.எட்வின்ராஜா

அ.சா.2 திரு.ரகுபதி

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அசாஆ.1 அத்தாட்சி

அ.சாஆ.2 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3 படிவம் 91

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** –

சா.பொ.1 – சுமார் 180 ML MGM Diamond XXX Rum 30 பாட்டில்கள்

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |